**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 212/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.8 |
| Name : | திரு. சங்கர், காவல் உதவி ஆய்வாளர் |
| Father's/Husband Name: | திரு. வெங்கடபதி |
| Village : | பாடாலூர் காவல் நிலையம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
(**எதிரிகள் 2, 4, 5 ஆஜர். எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்ப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது பாடாலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாண்டியன் ஆவார். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.02.2020ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் பணியிலிருந்த போது துரைசாமி மகன் காத்தலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 44/2020, இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) and 4 of TNPHW Actன்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ2 மற்றும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு 17.02.2020ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சென்று

சாட்சிகள் ராமு, ரெங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் காத்தலிங்கம், சித்ரா, ராஜேந்திரன், மணிகண்டன், பிரியா, இரும்புதுரை, காளிமுத்து, ராமு, ரெங்கராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் எதிரிகள் A1 and A2 இருவரையும் கைதிற்கான காரணத்தைக் கூறி கைது செய்து கணம் நீதிமன்றத்தில் அடைப்பு காவலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை.

காயம்பட்ட காத்தலிங்கம் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அப்துல்மஜித் ஜாபர்சாதிக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காத்தலிங்கத்தின் **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் அ.சா.ஆ6 மற்றும் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) and 4 of TNPHW Act ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் எந்த சாட்சிகளையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.